**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

D.V.C.34 /2023

PW-1 19-08-2024

| | |
|---|---|
| Name | மல்லிகா |
| Father's/Husband's Name | சண்முகசுந்தரம் |

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலம் தயார் செய்வதற்கு வழக்கறிஞரிடம் வழக்கு பற்றிய தகவல்களை நான் தான் சொன்னேன். திருமணத்தின்போது எதிர்மனுதாரர் தரப்பில் 4 கிராம் அளவில் திருமாங்கல்யம் எனக்கு அணிவித்தார் என்றால் சரியல்ல, 1.5 கிராம் மட்டுமே.

2) நிருபணவாக்குமூலத்தில் உள்ள எல்லா விபரங்களும் எனக்கு தெரியும். என்ன பரிகாரம் கேட்டு மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்னை எமாற்றி எதிர்மனுதாரர் திருமணம் செய்துள்ளார் மற்றும் எனக்கு ஜீவனாம்சம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன்.

3) திருமண ஏற்பாடு என் தரப்பில் என் அக்கா சுசிலா செய்தார். எதிர்மனுதாரர் தரப்பில் அவர்கள் பெற்றோர் செய்தார்கள். என் அக்காவிற்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான். தற்போது நானும் என் அக்காவும் என் அண்ணனும் ஒரே வீட்டில் கூட்டுக்குடும்பமாக இருக்கிறோம் என்றால் சரியல்ல, என் அண்ணன் தனியாக இருக்கிறார் எனக்கு ஆதரவு இல்லை என்பதால் நானும் என் அக்காவும் தற்சமயம் என் அண்ணன் வீட்டில் இருக்கிறோம்.

4) என் அண்ணனுக்கும் திருமணமாகவில்லை. என் அண்ணன் சென்னையில் டிவிஎஸ் கம்பெனியில் மாதம் ரூபாய் 35,000/– சம்பாதிக்கிறார் என்றால் சரியல்ல, ஆனால் டிவிஎஸ் கம்பெனியில் வேலை செய்கிறார். எவ்வளவு சம்பாதிக்கிறார் என்று எனக்கு தெரியாது.

5) நானும் என் அக்காவும் ஊரில் ஆடு வளர்க்கும் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல, என் அண்ணனுக்கு சொந்தமாக ஆடுகளை நானும் என் அக்காவும் சம்பளத்திற்காக வளர்த்து வருகிறோம்.

6) தற்போது என்னுடைய அடிப்படை தேவைகள் மற்றும் பணம் சம்மந்தப்பட்ட தேவைகளை என் அண்ணன் தான் பராமரித்து வருகிறார். நான் மனுதாக்கல் செய்யும் போது எதிர்மனுதாரர் மற்றும் பெற்றோர்கள் மற்றும் உடன்பிறந்தவர்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

7) 1ம் எதிர்மனுதாரரை தவிர மற்ற நபர்களை வழக்கில் இருந்து நீதிமன்றம் நீக்கியுள்ள விபரம் தெரியுமா என்றால் இல்லை. எதிர்மனுதாரருக்கும் எனக்கும் திருசெந்தூர் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றபோது திருமண விருந்திற்கான செலவுகளை எதிர்மனுதாரர் செலவழித்தார் என்றால் சரியல்ல.

8) நான் கொடுத்த 20000/- ரூபாயில் செலவை மேற்கொண்டார். நான் தாக்கல் செய்த மனுவிலும் நிரூபணவாக்குமூலத்திலும் எதிர்மனுதாரர் ஒருபோதும் என்னை வரதட்சனை கேட்டு கொடுமைபடுத்தியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

9) திருமணத்திற்கு என் தரப்பில் இருந்து ரூபாய் 3 லட்சம் செலவு செய்ததாக மனுவில் கூறியதற்கு ஆதரமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

10)15.10.2022ம் தேதி எதிர்மனுதாரர் எனக்கு சூடு வைத்தது சம்மந்தமாக சிப்காட் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் மீது போலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, புகார்மனு ரசீது கொடுக்கப்பட்டது, எதிர்மனுதாரர் என்னை நல்லபடியாக பார்த்துக்கொள்வேன் என்று எழுதி கொடுத்ததன் பேரில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

11)நானே எனக்கு சூடு வைத்து காயப்படுத்தி கொண்டதால்தான் போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனுவின் விசாரணையில் எதிர்மனுதாரும் நானும்

சேர்ந்து வாழ சொல்லி அறிவுறுத்தியும் நான் தான் சேர்ந்து வாழ மறுத்துவிட்டு என் அக்காவுடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

12) 02.01.2023ம் தேதி கடம்பூர் காவல்நிலையத்தில் எதற்காக புகார் கொடுத்தேன் என்றால் நான் புகார் கொடுக்க செல்லவில்லை எதிர்மனுதாரர் என் அக்கா மீது வேண்டும் என்றே புகார் கொடுக்க சென்ற விபரம் அறிந்து நானும் என் அக்காவும் கடம்பூர் காவல்நிலையம் சென்றோம். அங்கு நடவடிக்கை எடுக்கவில்லை. அதன்பின்பு கடம்பூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

13) கடம்பூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு எதிர்மனுதாரர் என்னை தனிக்குடித்தனம் நடத்த அழைத்து சென்றார் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர் வீட்டில் மாடியில் நானும் எதிர்மனுதாரரும் இருந்தோம் , கீழ்தளத்தில் எதிர்மனுதாரரின் பெற்றோரும் பிள்ளைகளும் இருந்தார்கள்.

14) மனுவில் கடம்பூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு எதிர்மனுதாரர் என்னை தனியாக ஒரு வீட்டில் குடித்தனம் நடத்தி வந்தார் என்று நான் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

15) எதிர்மனுதாரர் கடம்பூர் காவல்நிலையத்தில் என் அக்கா மீது புகார் கொடுத்தார் என்ற விபரத்தை மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 03.05.2023 அன்று மாவட்ட காவல்கண்காணிப்பாளரிடம் எதற்காக சம்மந்தப்பட்ட காவல்நிலையத்தில் புகார் கொடுக்காமல் மனு அளித்தேன் என்றால் எதிர்மனுதாரர் என் அண்ணன் மீது அடித்தார் என்று மாவட்ட காவல்கண்காணிப்பாளரிடம் புகார்மனு கொடுத்தார், எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் எனக்கு வன்கொடுமை செய்ததை நான் பொறுத்துக்கொண்ட போதிலும் எதிர்மனுதாரர் பொய்யாக புகார்மனு கொடுத்ததால் நான் மாவட்ட காவல்கண்காணிப்பாளரிடம் நடந்த விபரத்தை சொல்லி புகார் மனு கொடுத்தேன்.

16) எதிர்மனுதாரர் என் அண்ணன் மீது மாவட்ட காவல்கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்த விபரத்தை சொல்லியுள்ளேன். எதிர்மனுதாரர் 2 குழந்தைகளையும் நான்

கொடுமை செய்தேன் என்று என் மீது புகார்மனு கொடுக்கப்பட்டது என்றால் கொடுக்கப்பட்டது அந்த மனுவின் மீதான விசாரணையில் போலிசர் சத்தம் போட்டு அனுப்பினார்கள்.

17) நான் எதிர்மனுதாரர் மீது மாவட்ட காவல்கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார்மனு மேல் விசாரணைக்காக மாவட்ட சமூக பாதுகாப்பு அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

18) மாவட்ட சமூக பாதுகாப்பு அலுவலகத்தில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ சொல்லி என்னை அனுப்பியும் நான் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்து என் அக்காவுடன் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

19) அதன்பின்பு தான் எதிர்மனுதாரர் தூத்துக்குடி குடும்பநல நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி மனுதாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் விவாகரத்து கேட்டு மனுதாக்கல் செய்ததால் பழிவாங்கவேண்டும் என்று குடும் வன்முறையை எதிர்மனுதாரர் நிகழ்த்தினார் என்று பொய்யாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

20) எதிர்மனுதாரை பிரிந்து வந்தபின்பு சீதனப்பொருட்களை எடுப்பதற்கு முயற்சி செய்தேனா என்றால் இல்லை. சீதனப்பொருட்களை எடுத்து கொண்டு வருவதற்கு எதிர்மனுதாரர் எந்த தடையும் செய்யவில்லை என்றால் நான் போகவில்லை.

21) எதிர்மனுதாரருக்கு ஒரு மகனும் மகளும் உள்ளனர். அவர்களின் படிப்பு செலவை எதிர்மனுதாரர் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். 100 நாள் வேலைக்கு செல்கிறேன் என்றால் சரியல்ல.

22) 100 வேலை மற்றும் ஆடு வளர்ப்பு மூலம் மாதம் ரூபாய் 30000/- சம்பாதிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தனக்கு கிடைக்கும் சொற்ப வருமானத்தில் பிள்ளைகளையும் அவரது பெற்றோரையும் பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல,

எதிர்மனுதாரரின் தந்தை மத்திய அரசு ஊழியர்.

23)எதிர்மனுதாரர் வரதட்சனை கொடுமை செய்யவில்லை என்பதால் தான் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் குழந்தைகளை வளர்ப்பதில் உடன்பாடு இல்லை என்பதாலும் தனிக்குடித்தனம் நடத்த எதிர்மனுதாரர் மறுத்தார் என்பதால் பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது** )

**மறுவிசாரணை இல்லை**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.